கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, பொதுவாக கோவில் நிலங்களிலிருந்து வருமானம் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே அதை அதிகப்படுத்துவதற்கு ஒரு கமிட்டி அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கோவில் நிலங்களில் இருந்து வருகின்ற வருமானத்தை அதிகப்படுத்த அற நிலையத் துறை தக்க முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகின்றது. குத்தகை கொடுக்க வேண்டிய குத்தகைதாரர்கள் பேரிலே ஏராள மான வசூல் நிலுவை பாக்கி இருக்கிறது. இவற்றை வசூல் செய்ய வும் குத்தகையை அதிகப்படுத்துவதற்கான முயற்சியை மேற் கொண்டு வருகிறது.

திரு. ஈ. எம். நடராசன்: தலைவரவர்களே, பவானி வட்டத்திலே பல கோவில்களுக்கு டிரஸ்டிகள் இன்னும் நியமனம் செய்யப்பட வில்லை. அதற்கான ஏற்பாடுகளை அரசு விரைவில் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அறநிலைய ஆணைத் துறையின்கீழ் வந்து இருக்கிற எல்லாக் கோவில்களுக்கும் அறங் காவலர்களை நியமித்து இருக்கிறோம். அப்படி ஏதாவது நியமிக்கப் படாமல் விட்டுப் போயிருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தகவல் கொடுத்தால் அவைகளுக்கு அறங்காவலர்களை நியமிப்ப தற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளும்.

திரு. எம். சுரேந்திரன்: கோவில் நிலங்களையெல்லாம் அரசாங் கமே எடுத்துக் கொண்டு கோவில்களைப் பராமரிக்கின்ற செலவு களை அரசாங்கமே அளிப்பது நல்லது அல்லவா என்பதைப் பற்றி அரசு யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இது நல்ல யோசனைதான். ஆனால் காலம் கனிய வேண்டும்.

Idols unearthed in Tiruvathigai

* 60 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of idols were unearthed in Tiruvathigai near Cuddalore about 9th November 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை. 11—10—71-ல் திரு வதிகை ஸ்ரீ வீரட்டீஸ்வரர் கோயில் அலங்கார மண்டபத்தின் தளம் அப்புறப்படுத்தப்பட்டபொழுது இரு வெண்கல நடராஜர் விக்ரகங்கள் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டன.

1972 சனவரி 25]

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, இன்னும் பல சிலைகள் இருப்பதாகச் சொன்னார்கள். நடராசர் சிலை எடுக்கப்பட்டது. இப்படி எடுக்கப்பட்ட நடராசர் சிலைகள் அரசாங்கத்தின் பாது காப்பில் இருக்கின்றனவா அல்லது அரசாங்கத்திற்கு அப்பாற்பட் டவர்கள் பாதுகாப்பில் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த இரண்டு சிலைகளும் கோவிலுக்குள்ளேயே கண்டு பிடிக்கப்பட்டன. இந்த இரண்டு நடராசர் விக்கிரங்களும் திருவதிகை திரு வீரட் டீஸ்வரர் கோவில் அலங்கார மண்டபத்தைப் புதுப்பிப்பதற்காகத் திருப்பணிக் குழுவினர் திருப்பணியில் ஈடுபட்டபோது அங்குள்ள அலங்கார மண்டபத்தின் தளவரிசைக்குக் கீழே கண்டு பிடிக்கப் பட்டன. இந்தச் சிலைகள் மீண்டும் கோவிலிலேயே வைக்கப்பட் டுள்ளன.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, இப்படிப் பழைய கால சிற்பங்கள் செஞ்சிக் கோட்டையிலே இருப்பதாகச் சொல் கிறார்கள். அவற்றைத் தோண்டி எடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, செஞ்சிக் கோட்டையிலே சிலைகள் இருப்பது பற்றி நமக்குத் தெரியாது. செஞ்சித் தொகுதியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் முனுசாமி அவர்கள் தகவல் தெரிவித்து இருக்கிறார் ஆகவே இது பற்றி ஆராய்ச்சி செய்யலாம்.

திரு. கா. காளிமுத்து : இவ்வாறு தோண்டி எடுக்கப்படுகின்ற விக்கிரகங்கள் காட்சியிலே வைக்கப்படுகின்றன. அவற்றை பொருட் காட்சியிலே வைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : திருவதிகை திருவீரட் டீஸ்வரர் கோவிலில் தோண்டி எடுக்கப்பட்ட விக்கிரகங்கள் கோவிலுக்குள்ளேயே தோண்டி எடுக்கப்பட்ட காரணத்தினால் கோவிலுக்குள்ளேயே பழையபடி வைக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் தோண்டி எடுக்கப்படுகிற சிலைகள் கண்காட்சியில் வைக்கப்படுகின்றன. பாதுகாப்பான முறையிலே சில இடங்களில் தொல் பொருள் ஆராய்ச்சி இலாகாவிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]